மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இத்தகைய செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த ரோட்டின் இடையில் ஸிக்-ஸாக் என்று சொல்வது போன்று இரட்டை வளைவு உள்ள பாலமாக அமைந்திருப்பதால், அநேகம் விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இனிமேலாவது முயற்சி எடுத்து அதைச் சரி செய்ய உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் வேலை எடுக்கப்படவில்லை. ஆகவே, எந்த முயற்சியும் இப்போது எடுப்பதற்கு இல்லை.

* 365 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have decided to widen the narrow bridge across the Kodamuratti river on the Tiruchirappalli-Coimbatore Highway; and

(*b*) if so, what is its estimate and when it would be taken up for execution?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) திருச்சிராப்பள்ளி-கோயம்புத்தூர் சாலையின் 0/7-8 மைலில் குடமுருட்டி ஆற்றின் குறுக்கே உள்ள பாலத்தை அகலப்படுத்துவதற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

(இ) ஒப்பந்தக்காரர் இவ்வேலைக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு விட்டார். அவர் இந்த வேலையைச் சிறிது காலத்தில் தொடங்குவார்.

திரு. கே. விநயகம் : இந்த வேலைக்கு எவ்வளவு எஸ்டிமேட் போடப்பட்டது, எவ்வளவு நாட்களுக்குள் இந்த வேலையை முடித்து பொதுமக்களின் உபயோகத்துக்காக இந்தப் பாலத்தைத் தரமுடியும் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதற்காக 8 இலட்சம் ரூபாய் ஒப்புதல் அளிக்கப்பட்டு இருக்கிறது. 1964-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் அரசு ஒப்புதல் அளித்தது. ஆனால் இது வரையில் அந்த வேலை ஆரம்பிக்கப்படாமல் இருந்தது. 1967-ல் இந்த வேலைக்கான மதிப்பீடுகள் எல்லாம் ஒப்புக் கொள்ளப்பட்டு இப்போது வேலை தொடங்குகிற நிலையில் இருக்கிறது.

* 366 Q.—THIRU A. CHIDAMBARANATHA NADAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is a proposal to put up a bridge across Manakudy lake linking Kanyakumari–Kovalam road and Kottar–Manakudy road; and

(*b*) if so, the estimated cost of the work and when it will be taken up for execution?

1968 மார்ச் 30]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) அத்தகைய செயற் குறிப்பு எதுவும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

(இ) இவ் வினு எழவில்லை.

திரு. எ. சிதம்பரநாத நாடார் : மணக்குடி காயலின் பக்கத்தில் கீழ் மணக்குடி, மேல் மணக்குடி என்ற மீனவ கிராமங்கள் இருக்கின்றன. அவர்கள் மீனுக்கு உப்பு கொண்டுவருவதற்கும், மாணவர்கள் ஆங்காங்கு செல்வதற்கும், தொழிலாளர்கள் பக்கத்து கிராமங்களுக்குச் செல்வதற்கும் வசதியில்லாத காரணத்தால் தினம் தினம் நீந்திச் செல்கிற நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த நிலையை உணர்ந்து ஒரு நல்ல நடவடிக்கை எடுத்து இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த நிலையையும் உணருகிறோம், அதே நேரத்தில் நிதி நிலையையும் உணருகிறோம்.

* 367 வினு—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் டவுனிலிருந்து அண்ணாமலைநகர் செல்லும் பாதையில் உள்ள ரெயில் பாதையின் குறுக்கே ஒரு மேம்பாலம் கட்டும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவ்வித திட்டம் ஒன்றும் அரசின் கவனத்தில் இல்லை.

(திரு. கே. விநயகம் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிவசுப்பிரமணியன் அவர்கள் கேட்கவேண்டிய வினுவை திரு. விநயகம் அவர்கள் கேட்கிறார்களா ?

THIRU K. VINAYAKAM : You trapped me very well, Mr. Speaker.

சார், இந்தப் பாலத்தைக் கட்டுவதற்காக எவ்வளவு எஸ்டிமேட் போடப்பட்டது? அதற்காக மத்திய சர்க்காரிலிருந்து எவ்வளவு தரப்படுகிறது? நம் சர்க்காரிலிருந்து ஏதாவது தரப்படுமா? அப்படி இருந்தால் அந்தத் தொகையைச் சொல்லி எப்போது அந்த வேலையை எடுத்துக்கொள்வார்கள் என்று சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதற்காக 10 இலட்சம் ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தச் சாலையின் ஒரு பகுதி அண்ணாமலைநகரைச் சேர்ந்தது. ஒரு பகுதி சிதம்பரம் நகராட்சியைச் சேர்ந்தது. இடையில் உள்ள ரயில்வே பாதை மத்திய சர்க்காரைச் சேர்ந்தது. மூன்று பேர்களும் ஒத்து வந்த பிறகுதான் இந்தக் காரியம் நடைபெற வேண்டும்.